DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
SPECIAL COURT UNDER THE NATIONAL INVESTIGATION AGENCY ACT, 2008
(SESSIONS COURT FOR EXCLUSIVE TRIAL OF BOMB BLAST CASES),
CHENNAI AT POONAMALLEE, CHENNAI – 56.

| | | | |
|---|---|---|---|
| **Spl.SC. No.** | **05/2024** | Deposition of | **P.W. 7** ( L.W. 33 ) |
| Name | Thiru. Mohammed Zakkariya | Father's Name | |
| Street | | Village | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act of X of 1873 on the 03.07.2026.

**1 முதல் 6 வரையிலான எதிரிகள் ஆஜராகியுள்ளனர். 7ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியிருந்தனர்.**

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 11.26 A.M.**

நான் எனது தந்தையார் 1991ல் துவங்கிய Jamiah-Al-Uswathul-Hasanah Shareeath College என்ற அரேபிக் கல்லூரியில் 2007ல் பேராசியராக பணியாற்றி வந்தேன், என் தந்தையின் மறைவிற்கு பிறகு 2021ல் மேற்படி கல்லூரியின் முதல்வராக பணியாற்றி வருகிறேன். 2024 அன்று இஸ்லாமிய மதத்தின் படி ஷாபான் மாதத்தில் கரூர் ஜவகர் பஜார் பகுதி பள்ளிவாசலில் ஒரு சிறிய குரான் மனன மதர்ஷாவின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்க எனது ஊரில் சில அறிஞர்களோடு நான் கலந்துகொண்டேன். அந்த சமயம் விழா முடிந்ததற்கு பிறகு அந்த பள்ளிவாசலின் இமாம் மற்றும் அந்த சிறிய குரான் மனன மதர்ஷாவின் முதல்வருமாகிய எனது நண்பர் அபுல் ஹசன் என்பவர் ஒரு நபரை சுட்டிக்காட்டி இவர் உங்களோடு பேச விரும்புவதாக கூறினார். பிறகு அந்த நபர் தன்னை

என்னிடம் அறிமுகப்படுத்திக்கொண்டு அவர் என்னை என் கல்லூரியில் வந்து சந்திக்க விரும்புவதாக கூறினார். எனினும் நான் சுறுக்கமாக சந்திக்க வேண்டிய காரணத்தை வினவினேன். அச்சமயம் அவர் இந்திய அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டதான Hizb-ut-thahrir என்னும் இயக்கத்தை பற்றி அவர் பேச துவங்கினார் அவ்வாறு பேச துவங்கிய உடனேயே நான் அவரை இடை மறித்து இது இந்திய அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட அமைப்பு என்று கூறி அவருடைய பேச்சை கேட்க விரும்பவில்லை. அந்த இயக்கம் சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்ட இயக்கம் என்று எனக்கு தெரியும், இந்தியாவிலும் அந்த இயக்கம் தடை செய்யப்பட்டிருந்ததாக நான் நினைத்திருந்தேன். எனவே உடன் வந்திருந்த அறிஞர்களையும் இந்த பேச்சை கேட்க வேண்டாம் என்று நான் தடுத்தேன். பிறகு அவர் ஒரு சிறிய  துண்டு பிரசுரம் கொடுத்தார். நான் அதை அங்கேயே போட்டுவிட்டு மற்றவர்களையும் அதை எரிந்துவிட்டு வரும்படி கூறினேன். பிறகு நாங்கள் ஒன்றாக எங்கள் சொந்த ஊர் பள்ளப்பட்டிக்கு காரில் திரும்பி செல்லும்பொழுது நாம் புனிதமான வேலை செய்து வருகிறோம், இதுபோன்ற பிரச்சாரங்களை செவி மடுப்பது அதுபோன்ற நபர்களுக்கு ஒத்துழைப்பது நமது நட்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும், மேலும் உளவு துறை, காவல்துறை நம்மை கண்காணிக்கலாம், இது நமக்கு தேவையற்ற சங்கடங்களை ஏற்படுத்தலாம் என்று கூறி இது போன்ற பேச்சுக்களுக்கும், தொடர்புகளுக்கும் இத்துடன் அனைவரும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று நான் என்னுடன் இருந்த அறிஞர்களை

எச்சரித்தேன். (சாட்சி 1ம் எதிரியை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார், அவர்தான் அன்றையதினம் தன்னிடம் பேசிய நபர் என்று கூறினார் அதன்பிறகு 1ம் எதிரி தன் பெயரை சொன்னவுடன் ஆமாம் ஹமித் உசைன் என்று சாட்சி கூறினார்). இது சம்மந்தமாக என்ஐஏ அதிகாரிகள் என்னை நேரில் விசாரித்தார்கள்.

(எதிரிகள் தரப்பு இளைய வழக்கறிஞர் ஆஜரில் இருந்து மூத்த வழக்கறிஞர் வெளிநாடு சென்றுவிட்டதால் அவர் திரும்பிய உடனேயே குறுக்கு விசாரணை செய்வதாக கூறினார்)

**முதல் விசாரணை முடிவடைந்த நேரம் 11.49 A.M.**

**குறுக்கு விசாரணை இல்லை.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

SUBRAMANIAN MALARVIZHI

Digitally signed by SUBRAMANIAN MALARVIZHI
Date: 2026.07.03 12:34:50 +0530

District and Sessions Judge.
Special Court under the National Investigation Agency Act, 2008,
Chennai @ Poonamallee.